செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 69 நாள் : 6/2/18

# பத்திரிகைச் செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம், வேலூர் மாவட்டத்தில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அம்மா இருசக்கர வாகன திட்டம் தற்போது வேலூர் மாவட்டத்தில் பெண்கள் தங்களது பணியிடங்களுக்கும் பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் அம்மா இரு சக்கர வாகனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் வேலூர் மாவட்டத்திற்கு இலக்கீடாக 5653 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஊரகப்பகுதிகளுக்கு 3198 மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு 2455 வழங்கப்பட உள்ளது.

இதன் அடிப்படையில் கிராமம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள உழைக்கும் மகளிர் இத்திட்டத்தில் பயன் அடையலாம். மேற்படி இத்திட்டத்தில் பயன் பெறுவோருக்கு இரு சக்கர வாகனங்கள் ஒதுக்கப்படும் பட்சத்தில் அரசு மானியமாக அதிகபட்சம் 50% சதவீதம் மானியம் அல்லது ரூ.25000/-இதில் எது குறைவோ அதனை மட்டும் வழங்கப்படும்.

அம்மா இருசக்கர வாகன திட்டத்திற்கு விண்ணப்பிக்க 05.02.2018 மாலை 5.00 மணிவரை நிர்ணயம் செய்யப்பட்ட காலகெடு தற்போது 10.02.2018 மாலை 5.00 மணி வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள உழைக்கும் பெண்கள் அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ் பயனடைய 10.02.2018 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3/3

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.